

தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்பு குழு சார்பில் திருச்சியில் ஒருங்கிணைந்த பஞ்சப் பூர். பேருந்து நிலையம் அமைத்துக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக பாராட்டு விழா,YWCA வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் அன்பழகன், தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்பு குழு கவுன்சில் செயலாளர் புஷ்பவனம், டால்மியா சிமெண்ட் முன்னாள் நிர்வாக இயக்குனர் கோபாலகிருஷ்ணன், காவிரி கல்லூரி நீலகண்டன், மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம் விஜயா ஜெயராஜ். கருணாநிதி கோட்டத் தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன் ,துர்கா தேவி கவுன்சிலர்கள் கலைச்செல்வி புஷ்பராஜ், பவுல்ராஜ், கமால் முஸ்தபா ராமதாஸ் , தனசேகர் வழக்கறிஞர் அந்தோணி தஸ்தகீர், சதீஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கழகப் பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் துணைவியாரும் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் தமிழ்நாடு அரசின் தலைமைக் கொறடா கா. இராமச்சந்திரன் அம்மையாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.90.75 கோடியில் புதிய திட்டப்பணிகள் - ரூ.4.88 கோடியில் முடிவுற்ற பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்து திறந்து வைத்தார்!

கோவை,ஆக,26–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.90.75 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து ரூ.4.88 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கோவை மாநகராட்சிக்குட்பட்ட கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்தியம் என 5 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.72 க்குட்பட்ட ஆர்.எஸ்.புரம், சுப்பிரமணியம் சாலை மாதிரிப் பள்ளியில், பள்ளி மேம்பாட்டு மானிய நிதி மற்றும் பொது நிதியின் கீழ் ரூ.2.92 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட மாணவர்கள் தங்கும் விடுதி மற்றும் ரூ.1.96 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்து, மத்திய மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலைய வளாகத்தில் அபிவிருத்தி கட்டணம் மற்றும் மாநகராட்சி பொதுநிதியின் கீழ் ரூ.21.55 கோடி மதிப்பீட்டில் நவீன முறையில் புதுப்பிக்கும் பணி மற்றும் தெற்கு மண்டலம், வார்டு எண்.99க்குட்பட்ட வெள்ளலூர் உரக்கிடங்கு வளாகத்தில், சுற்றுச் சூழலை பாதுகாக்கும் விதமாக தினசரி சுமார் 250 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளை செயல்படுத்தக் கூடிய வகையில் ரூ.69.20 கோடி மதிப்பீட்டில் இயற்கை எரிவாயு மையம் (Bio Gas Plant) அமைக்கும் பணியினை துவக்கி வைத்து, கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.4.88 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகள், மற்றும் ரூ.90.75 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள் என மொத்தம் ரூ.95.63 கோடி மதிப்பீட்டிலான திட்டப்பணிகளை துவக்கி வைத்தார். முன்னதாக, கோவை மாநகராட்சிக்குட்பட்ட காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் முதற்கட்டமாக சுமார் 45 ஏக்கர் பரப்பளவில் ரூ.167.25 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் செம்மொழிப்பூங்கா கட்டுமானப் பணி, ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 7.02 ஏக்கர் பரப்பளவில் உள்ள மைதானத்தில் ரூ.9.67 கோடி மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் செயற்கை புல்வெளி தளத்துடன், நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் ஹாக்கி விளையாட்டு மைதானத்தினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கவுண்டம்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுவரும் கழிவு நீர் சுத்தி கரிப்பு நிலையத்தினையும், கவுண்டம்பாளையம் பகுதியில் ரூ.9.96 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுவரும் குப்பை மாற்று நிலையத்தினையும், தெற்கு மண்டலத்திற்குட்பட்ட போத்தனூர் இரயில் நிலையம் அருகில் ரூ.591.14 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான குறிச்சி குனியமுத்தூர் குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளையும் அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின் போது, நகராட்சி நிர்வாக இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி, கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வர சாமி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமசந்திரன், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரகன், மாநகராட்சி ஆணையாளர் (திருப்பூர்) அமித், உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.பிரசாத், கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், ஏர்போர்ட் ராஜேந்திரன், டாக்டர் மகேந்திரன், மு.மா.ச.முருகன், ரகு துரைராஜ், கோட்டை மேடு வி.ஐ. பதுருதீன், எம்.மனோகரன், ஆர்.எஸ்..புரம் கார்த்திக் செல்வராஜ், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், த.குமரேசன், அ.சுல்தானா, விஜயகுமார், இளங்கோவன், ரெ.தனலட்சுமி (தெற்கு), கே.ஏ.தெய்வயானை தமிழ்மறை (மேற்கு), மீனா லோகு (மத்தியம்), சாந்தி முருகன், வித்யா ராமநாதன் வி.ப.முபசீரா, சந்தோஷ், மாலதி நாகராஜ், ஏ.அப்பாஸ், சுலைமான், சி.வி.தீபா,

வெங்கடேஷ், செல்வகுமார், முத்துசாமி, ராஜ சேகர், மரு. மோகன், மரு.பூபதி, துரை முருகன், செந்தில்குமரன், குமரன், முத்துசாமி, கருப்பசாமி, சவிதா, ஹேமலதா, சவிதா, ராஜேஷ்கண்ணா, எழில், கனகராஜ், கார்த்திகேயன், கார்த்திக் செல்வராஜ், வித்யாராமன், சம்பத், கிருஷ்ணமூர்த்தி, மு.அஸ்லாம் பாஷா, மா.மனோகரன், மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாநகராட்சி, இராணியார் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ‘‘நலம் காக்கும் ஸ்டாலின்’’ உயர்மருத்துவ சேவை முகாமினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 23.08.2025 அன்று துவக்கி வைத்து பார்வையிட்டார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, புதுக்கோட்டை வருவாய்க் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.எஸ்.கலைவாணி, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, புதுக்கோட்டை மாவட்ட சுகாதார அலுவலர் மரு. ராம்கணேஷ், மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத்அலி மற்றும் அரசுஅலுவலர்கள் பலர் உள்ளனர்.

### 2ஆம் ஆண்டு இயற்கை வேளாண் திருவிழா!

# கரூரில் கருத்தரங்கம் - கண்காட்சி - இயற்கை உணவு செய்யும் பயிற்சி!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

கரூர்.ஆக.26.

கரூரில் நடைபெற்ற 2ம்ஆண்டு, கரூர் இயற்கை வேளாண் திருவிழாவில், கருத்தரங்கம், மற்றும் கண்காட்சி, இயற்கை உணவு செய்யும் பயிற்சி ஆகியவற்றை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்து பார்வையிட்டார்.

வேளாண் மக்களின் விடிவெள்ளி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், ஜேசிஐ. கரூர் டயமன்ட், யங் இந்தியன்ஸ், வானகம் ஏற்பாட்டில், கரூர் இயற்கை விவசாயிகள் சங்கம், நம்மாழ்வார் உயிர்ச் சூழல் நடுவம் மற்றும் தனியார் கல்லூரிகள் இணைந்து நடத்திய இரண்டாம் ஆண்டு ‘கரூர் இயற்கை வேளாண் திருவிழா 2025’, கரூர் கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில், இயற்கை விவசாயிகள், விவசாய பெருமக்கள், இயற்கை விவசாய ஆர்வலர்கள், மாணவ மாணவியர்கள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி, வேளாண் திருவிழா, கண்காட்சியை தொடங்கி வைத்தார். விழாவில் அவர் பேசியதாவது:

கடந்த காலங்களில் மின் இணைப்பு கேட்டு கிடைக்குமா என சந்தேகத்தில் விவசாயிகள் காத்திருந்தனர். ஆட்சி பொறுப்பேற்றதும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முதல் ஆண்டிலேயே ஒரு லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பை வழங்கினார்கள். தொடர்ந்து இந்த நான்கு ஆண்டுகளில் 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பை தந்து ஒரு வரலாற்றுச் சாதனையை செய்திருக்கக் கூடியவர் நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். ஏற்கனவே ஆட்சியில் இருந்தவர்கள் கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் மொத்தமே 2 லட்சத்து 20 ஆயிரம் விவசாயிகளுக்குத்தான் மின் இணைப்பு கொடுத்தார்கள். ஆனால் இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 2 லட்சம் விவசாயிகள் இந்த ஆண்டு கூடுதலாக 50,000 விவசாயி களுக்கான இலவச மின் இணைப்பை கொடுப்பதற்கான உத்தரவுகளையும் நமது முதலமைச்சர் அவர்கள் வழங்கி அதற்கான இணைப்புகள் வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

பொதுவாக மின்சாரத்திற்கு கட்டணம் செலுத்தி நாம் விவசாயம் செய்ய முடியுமா என்ற விவசாய பெருமக்களின் கவலையை உணர்ந்து முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின் இணைப்பை கொடுத்து இந்தியாவிற்கே விவசாயிகள் மத்தியில் ஒரு புரட்சியை உருவாக்கித் தந்தார்கள். அவர்களது வழியில் நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2.5 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பை வழங்கி உள்ளார்கள்.

இதன் வாயிலாக மூன்று லட்சம் ஏக்கர் கூடுதலாக பாசனம் பெறக்கூடிய ஒரு சூழலை நமது முதலமைச்சராக அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். வேளாண்மைக்கு தனி பட்ஜெட் வழங்கியது, புதிய வேளாண்மை கல்லூரிகள் அமைத்தது, அதில் ஒன்று கரூரில், ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டிலேயே தொடங்கி மாணவச் செல்வங்கள் பயின்று வருகின்றார்கள். மாயனூர் பகுதியில் சொந்த கட்டிடம் கட்டுவதற்காக 40 ஏக்கர் தேர்வு செய்யப்பட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு விரைவில் அதற்கான பணிகளை நடைபெற இருக்கின்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தான் நம்முடைய மாயனூர் பகுதியில் புதிய காவிரி ஆற்றின் குறுக்கே புதிய கதவணை கட்டப்பட்டது.

கரூர் மாவட்டத்தில் சிறிய தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. அதோடு அரவக்குறிச்சி, நெரூர், மருதூர் போன்ற இடங்களில் கட்டப்படுகிறது. இப்படி தொடர்ச்சியாக விவசாயத்திற்கு தேவையான திட்டங்களோடு சேர்த்து இன்னும் கூடுதலாக நதிநீரேற்று பாசன சங்கங்களை முன்னெடுத்து, அதன் மூலமாக வறண்ட பகுதிகளில் நம்முடைய ஆற்றுநீரை எடுத்துச் சென்று பாசனப்பரப்பை அதிகரிக்க முதல் கட்டமாக நம்முடைய உப்பிடமங்கலம், வெள்ளியணை பகுதிகள், கரூர் ஒன்றிய பகுதிகளிலும் விரைவில் திட்டம் தொடங்கப்பட இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக மாவட்டத்திற்கும், விவசாயிகளுக்கும் நல் ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நானும் விவசாயி என பேச்சளவில் சொல்லிக் கொண்டிருக்காமல், திட்டங்களை செயல்படுத்தக்கூடிய அரசாக திராவிட மாடல் அரசை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தாதம்பாளையம் ஏரியை தூர் வார வேண்டும் என்பது முன்னோர்களின் கனவாக இருந்தது. அதை செயல்படுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். வனத்துறைக்கு மாற்று இடம் வழங்கி அரசினுடைய கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்து தூர்வாரப்படும். அருகில் உள்ள மாவட்டத்தில் வனத்துறைக்கு மாற்று இடம் வழங்க அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது.

முருங்கை உற்பத்தியை பற்றி சொன்னார்கள். அரவக்குறிச்சியில் யாரெல்லாம் தேர்தல் களத்தில் நிற்கின்றார்களோ அவர்கள் ஒவ்வொரு முறையும் சொல்லக்கூடிய ஒரு தேர்தல் வாக்குறுதியாகவே இருந்து வந்தது. நம்முடைய ஆட்சியில் தான் முருங்கை பூங்கா அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக முருங்கை ஏற்றுமதி மண்டலமாக உருவாக்கப்படும். முருங்கை உற்பத்தியில் அரவக்குறிச்சி முதலிடம் என்கிற நிலை உருவாக்கப்படும்.

எனவே தொழில் நிறுவனங்களாக இருந்தாலும் சரி, விவசாயம் சார்ந்த நம்முடைய உற்பத்தி பொருட்களை முன்னெடுக்கக்கூடிய திட்டங்களாக இருந்தாலும் சரி, நிச்சயம் ஒரு விவசாயியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் டெல்டாகாரர். என்பதால் விவசாயிகளின் நலனில் தனி கவனம் செலுத்தி வருகின்றார்கள்.

கவுன்சிலராக இருந்து, எம்எல்ஏவாகி அமைச்சராக ஆகிவிட்டதாக என்னை பற்றி நினைக்கலாம். நானும் மாடு மேய்த்தவன், சாணி அள்ளி, வயல் வேலை செய்து, காய்கறிகளை கொண்டு போய் சந்தையில் விற்றவன்தான். உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக்க அனைவரும் பாடுபடுவோம். இவ்வாறு அவர் பேசினார்.

### மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

# அரூரில் அண்ணா அறிவகம் திறப்பு விழா!

## முனைவர் பி.பழனியப்பன் திறந்து வைத்தார்!

தருமபுரி, ஆக. 26–

தருமபுரி மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் அரூரில் அண்ணா அறிவகம் திறப்பு விழா!

தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் கோவிந்தசாமி நகரில் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படிபொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழில்துறை அமைச்சர்,தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் டாக்டர் ஏ. கே.தருண்ஆகியோர் வழிகாட்டுதல்படி,தருமபுரி மேற்கு மாவட்ட திமுக தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் அண்ணா அறிவகம் District Firewall லை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி. பழனியப்பன் திறந்துவைத்தார்.

மாநில ஐடி விங் துணை செயலாளர் சுரேஷ் செல்வராஜ் ரத்தினம்,ப.எழில்மறவன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.தருமபுரி மேற்கு மாவட்ட ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் கு.தமிழழகன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்வில் மாநில நிர்வாகிகள் எஸ்.ராஜேந்திரன், அ.சத்தியமூர்த்தி,டி.எம்.அரியப்பன், மாவட்ட நிர்வாகிகள் சி. கிருஷ்ணகுமார்,எஸ்.கலைவாணி,ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.வேடம்மாள், கோ. சந்திரமோகன், வி.சௌந்தரராசு, சி.தென்னரசு, இ.டி.டி. செங்கண்ணன், எம்.ரத்தினவேல், சி.முத்துக்குமார்,டி.நெப்போலியன், ஆனந்தன், மாவட்ட அமைப்பாளர்கள் வழக்கறிஞர் டி.சந்திரசேகர்,ஆர்.சிவகுரு,எம். கவிதா மோகன்தாஸ் ,வெங்கடேசன்,ப.செந்தாமரைக்கண்ணன் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள்

எம்.ராஜ்கமல், சி.சண்முகம், பரணிசக்தி, கே.கண்ணப்பன், பிரியங்கா, மயில்குமார், சங்கமேஷ்வரன், சதிஷ்குமார், மேகராஜ், சக்தி, மூர்த்தி, ராதிகா, கங்கை அமரன், நந்தினி, மணிவண்ணன், தமிழரசன், சம்பத் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



அரியலூர் மாவட்டம். செந்துறை ஊராட்சி ஒன்றியம், செந்துறை ஊராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் முகாமினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு. முகாமில் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்திட கோரி விண்ணப்பம் அளித்த நபர்களுக்கு உடனடியாக பெயர் மாற்றத்திற்கான ஆணையை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையில் நிகழ்த்தப்பட்ட நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு என்ற திருப்பூர் மாவட்ட நான்காண்டு சாதனை மலரை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வெளியிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், பல்லடம் நகர செயலாளர் ந.ராஜேந்திரகுமார், கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் ச.ராஜசேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.